IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.367/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VINAYAGAM |
| FATHER'S NAME | : | DURAISAMI |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of March 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பரதராமி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2023 ஆம் வருடம் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.நாகராஜன் அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 09.09.2023 அன்று மாலை 05.30 மணியளவில் இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திரு.நாகராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவா த/பெ.ராமகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.146/2023 இதச பிரிவுகள் 294(பி), 506(1) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

மறுநாள் 10.09.2023 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் கௌதம் மற்றும் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் சாட்சிகள் சிவா, பிரவீனா, மோகன்குமார், கௌதம், சிலம்பரசன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் பிணையில் விடக்கூடிய குற்றம்

என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டனர்.

முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.